**தலைப்பு 114 – போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 114 – போக்குவரத்து மற்றும் விசில் விமான சேவைகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சுக்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 28,380.03 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 20,890.71 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 7,489.32 மில்லியன் அதாவது 26.39 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 12,595.38 | 12,471.21 | 124.17 | 0.99 |
| மூலதனம் | 15,784.65 | 8,419.50 | 7,365.15 | 46.66 |
| மொத்தம் | **28,380.03** | **20,890.71** | **7,489.32** | **26.39** |

2.2 **வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

அமைச்சினால் 2015 ஆண்டிற்கான இலக்கம் 20.03.02.08 கொண்ட வருமானக் குறியீடு ஒன்றிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 4,500 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 3,963 மில்லியன் கூட்டுமொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 88.07 சதவீதமாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.08 | 4,500 | 3,963 | 537 | 11.93 |

2.3 **முற்பணக் கணக்கு**

2.3.1 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 11401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 11.00 | 9.77 | 4.66 | 5.78 | 45.00 | 20.19 |

2.4 **பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சின் கீழ் பின்வரும் 02 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9.45 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0013/0112 | 9.34 |
| 6000/0002/00/0016/0102 | 0.11 |
| மொத்தம் | **9.45** |

2.5 **கணக்காய்வு அவதானிப்பு**

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. **பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

3.1 **பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை**

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | இழப்புக்களும் நட்டங்களும் | நிதிப் பிரமாணம் 110 |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (iii) | பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |
| (iv) | கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 61,250,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 30 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் மீதி அச் செலவு விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாடுகளில் 5 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது.

### 3.3 வருமானக் கணக்குகள்

அமைச்சுச் செயலாளர் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 20.03.09.08 கொண்ட வருமானக் குறியீடு தொடர்பாக வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளை சமர்ப்பித்தல் ஆகிய பொறுப்புக்கள் சாட்டப்பட்டிருந்தது. அவ் வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி வருமானக் குறியீடு தொடர்பாக ரூபா 4,500 மில்லியன் வருமானம் சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,963 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 88.07 சதவீதத்தை கொண்டிருந்தது.

(ஆ) நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமானக் குறியீட்டுக்கான அரை ஆண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

விடய இலக்கம் 11401 கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,345,560 ஆகக் காணப்பட்டதுடன், அந்நிலுவை மீதி 01 வருடம் முதல் 17 வருடங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்ட போதிலும், குறிப்பிட்ட கடன் மீதியை அறவீடு செய்வதற்கான பின் தொடர் நடவடிக்கை பலவீன நிலையில் இருந்தது.

(ஆ) 1996 மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளின் போது ஓய்வு பெற்றிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் ரூபா 77,580 தொகையும், 1997 ஆம் ஆண்டின் போது இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் ரூபா 10,944 இற்கான கடன் தொகை ஒன்றும், 2015 திசெம்பர் 31 திகதி வரை நிலுவையாகக் காணப்பட்டது. நிலுவைக் கடன் தொகையை அறவீடு செய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### 3..5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும், 2015 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மேற்கூறிய சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருட்கள் மெய்மையாய்வு செய்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 அக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 வருடாந்தம் பொருட்கள் மெய்மையாய்தல் மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அமைச்சு 2016 மே 31 திகதி வரை அவ்வறிக்கையை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. இறுதியாக 2014 ஆண்டிற்காக பொருட்கள் மெய்மையாய்தல் ஒன்று நடத்தப்பட்டிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்தல் அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த மிகைகள் பற்றாக்குறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய விதப்புரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. தேவையான பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் பொருட்கள் மெய்மையாய்தல் விடயங்கள் திருப்திகரமாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது என அவ் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**3.7 வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் செயற்திட்டம் ஒன்று செயற்படுத்தியிருந்தது. அதனது கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 36,166 தொகையாகக் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,321 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாத்தறை – கதிர்காமம் புதிய புகையிரதப் பாதை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்த வேலை வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வொப்பந்த வேலை தொடர்பாக வெளிநாட்டு கம்பனியுடன் அமைச்சு உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்தது. அவ்வுடன்படிக்கையின் பிரிவு 8.3 இன் பிரகாரம் ஆரம்ப ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. ஆரம்ப ஆய்வு மேற்கொள்ளப்படாமல் சமர்ப்பித்திருந்த நிகழ்ச்சித் திட்டம் 2016 மே 31 ஆந் திகதியளவில் 11 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தகாரருக்கு வேலை ஆரம்பிப்பதற்காக செயற்திட்டத்தினால் வழங்கியிருந்த அமெரிக்க டொலர்கள் மில்லியன் 84.36 வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணத் தொகையில் 2016 மார்ச் மாதமளவில் டொலர்கள் 8.46 மீண்டும் அறவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் 09 மாதங்கள் மீதியாக இருந்ததுடன் அமெரிக்க டொலர் 75 மில்லியனிற்கான வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் அக் காலப்பகுதியிலேயே அறவிடப்பட வேண்டியிருந்தது. அம்முற்பணம் அறவிடப்பட வேண்டியிருந்த மீதி வேலைகளின் பெறுமதி அ.டொ. 150 மில்லியனாக இருந்தது.

(இ) திருத்திய ஒப்பந்த நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 11 இன் பிரகாரம் வீதியின் பகுதிக்குள் உள்ளடங்கிய (Section 01) அ.டொலர் 185,100 தொகை மதிப்பீட்டு பெறுமதியாகிய 03 மதகுகள் நிர்மாணித்தல் 2016 ஜூன் மாதம் அளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 5.098 கி.மீ 60 பக்கச் சுவர்கள் (வலது மற்றும் இடது ஓரங்களுக்காக) நிர்மாணிப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவில் 3.54 கி.மீற்றர்களில் நிர்மாணிக்கப்பட வேண்டிய 43 பக்கச் சுவர்கள் திட்டத்தின் பிரகாரம் நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) ஒப்பந்தகாரரினால் 53 அமெரிக்க டொலர்களுக்கான பொறியியல் மதிப்பீடான பாலங்கள் மற்றும் ஏனைய நிர்மாண வேலைகளுக்காக அ.டொ. 80 மில்லியன் விலை குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை செயற்திட்டக் குழு மதிப்பீட்டின் மூலம் பொறியியல் மதிப்பீடு அ.டொ. 53 மில்லியன் வரை குறைந்திருந்தது. பின்னர் ஒப்பந்தகாரர் அதனை அ.டொ. 91 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அதே போல் இந்த நிர்மாண வேலைகளின் ஆரம்பத்தில் காணப்பட்ட அளவுகள் மற்றும் இடங்கள் பின்னர் மாற்றப்பட்டிருந்ததுடன் அதற்கான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஊ) மாத்தறை – பெலிஅத்த புகையிரதப் பாதை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 4 பிரதான புகையிரத நிலையங்கள் மற்றும் 02 உப புகையிரத நிலையங்களின் நிர்மாண வேலைக்காக அ.டொ. 19 மில்லியனுக்கான மதிப்பீடு ஒன்று அனுமதிக்கப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி 29 திகதி வரை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2½ வருடங்கள் கடந்திருந்த போதிலும், பிலதுவ, வெஹரஹேன, பெலிஅத்த ஆகிய புகையிரத நிலையங்களின் ஆரம்ப வடிவமைப்பிற்கான அங்கீகாரம் பெறுதலும் 60 சதவீத நிலையிலேயே காணப்பட்டதுடன் 6 புகையிரத நிலையங்களுக்கான இறுதி அங்கீகாரம் 2016 பெப்ரவரி மாதம் இறுதி வரையும் பெறப்பட்டிருக்கவில்லை.

(எ) செயற்திட்டத்தினால் புகையிரதப் பாதைகள் நிர்மாணிப்பதற்காக அ.டொ. 27 மில்லியன் தொகையொன்று மதிப்பீடுகளில் அங்கீரித்திருந்த போதிலும், அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவை 4.2 வழிகாட்டல்களின் பிரகாரம் சில்பர் மற்றும் புகையிரத தண்டவாளங்கள் கொள்வனவு செய்தவதற்காக 2016 ஜூன் மாதம் வரையும் கொள்வனவு திட்டமொன்று மற்றும் அதற்காக நேரசூசி ஒன்றும் தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஏ) புகையிரத பாதையின் சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு முறைமை நிறுவுவதற்காக அ.டொ. 10 மில்லியன்கள் மதிப்பிட்டிருந்த போதிலும் பின்னர் அப்பெறுமதியினை அகற்றி மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஜூன் 15 திகதி வரை அதாவது செயற்திட்டம் முடிவடைவதற்கு அண்மித்திருந்த போதிலும் சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு முறைமை நிர்மாணிப்பதற்கு தேவையான வடிவமைப்புகள் மற்றும் வரைபுகள் (Desing & Drawing) தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டு இறுதி வரை புகையிரதப் பாதைகளுக்காக 1512 காணித் துண்டுகள் பிரதேச செயலக மட்டத்தில் கையேற்கப்பட்டிருந்தது. அக் காணித் துண்டுகளில் 1245 காணித்துண்டுகளுக்காக ரூபா 989,102,585 தொகை நட்டஈடு செலுத்தப்பட்டிருந்தது. இந்த நட்டஈடாகச் வழங்கல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 ஆண்டு முதல் புகையிரதப் பாதை செயற்திட்டத்திற்கான காணிகள் கைப்பற்றும் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஜூன் 17 திகதி வரை 122 காணித் துண்டுகளுக்காக நட்டஈடு வழங்கும் விடயங்கள் பூர்த்தி செய்திருக்காததுடன் நட்டஈடு வழங்குவதிலுள்ள தாமதத்தின் காரணத்தினால் செலுத்துவதற்கு நேரிடும் வட்டி தொடர்பாக மதிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்திற்காக கையேற்கப்பட்ட காணித்துண்டுகளின் உரித்தை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் நட்டஈடு செலுத்திய திகதி வரை ஏற்பட்டிருந்த தாமதத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ரூபா 579,038 இற்கான மேலதிகத் தொகையொன்று வட்டியாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(ஒ) செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதி வரை 372 பொதுமக்கள் முறைப்பாடுகள் நிர்மாண வேலை ஒப்பந்த கம்பனிக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அம் முறைப்பாடுகளில் ஒப்பந்தகாரரினால் நிர்மாண வேலைக்காக பயன்படுத்தும் இயந்திரங்களின் மிகையான சப்தத்தின் காரணமாக 128 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அம் முறைப்பாடுகளைக் குறைப்பதற்கு பொருத்தமான இயந்திரங்கள் பயன்படுத்தல் மற்றும் சமூகம்சார் தாக்கங்களை குறைப்பதற்கு ஒப்பந்தகாரர் எடுத்திருந்த நடவடிக்கை பற்றி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 உள்நாட்டு நிதியளித்தல் மூலம் செயற்திட்டங்கள் அமுல்படுத்துதல்

### செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) போக்குவரத்து சிவில் விமான சேவைகள் அமைச்சு, யப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் சேர்ந்து 2012 ஆண்டின் போது ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஆய்வின் போது காணிகள் கைப்பற்றல் குறைந்த அளவில் நடைபெறும் விதமாக புதிய மொனோரேல் புகையிரதப் பாதை முறைமையொன்று சிறீஜயவர்தனபுர கோட்டை ஊடாக மாலபேயில் இருந்து கோட்டை மற்றும் கொள்ளுபிட்டி வரை நிர்மாணிக்கப்பட வேண்டும் என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக சாத்தியவள ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் விடயங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மா நகர மற்றும் மேல்மாகாண அமைச்சின் செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்காக கலந்துரையாடல் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

(ஆ) 07 புகையிரதப் பாதைச் செயற்திட்டங்களை புதிய புகையிரப் பாதை அபிவிருத்திச் செயற்திட்டம் என இனங்கண்டு அதற்காக 05 வருட காலம் முதல் வருடாந்த நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. 2015 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலமும் இதற்காக ரூபா 260 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த 07 செயற்திட்டங்களில் பின்வரும் 06 செயற்திட்டங்கள் வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அமைச்சு அல்லது அதனது தொழிநுட்ப பிரிவு செய்திட்டத்தை செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | செயற்திட்டம் | நிதியேற்பாடுகள்<br>ரூபா.மில்லியன் |
|---|---|---|
| (i) | கொட்டாவ ஹொரண புகையிரதப் பாதை | 05 |
| (ii) | குருநாகல் ஹபரண ஊடாக தம்புள்ள புகையிரதப் பாதை | 10 |
| (iii) | கொழும்பு ஹம்பாந்தோட்டை களணிவெளி புகையிரப் பாதை | 10 |
| (iv) | மதவாச்சி திருகோணமலை புகையிரதப் பாதை | 10 |
| (v) | வெள்ளவாய பிபில பதுளை புகையிரதப் பாதை | 10 |
| (vi) | திருகோணமலை மாகோ புத்தளம் புதிய புகையிரதப் பாதை | 10 |

## 3.9 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) தேர்தல் விடயங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த அரசாங்க வாகனங்களுக்காக ரூபா 200,000 தொகையான அரசாங்க கட்டணம் அறவிடப்படாமை

2015 ஜுலை 17 திகதிய CSA/1/1/92 இலக்க ஜனாதிபதி செயலாளலரின் சுற்றறிக்கையின் மூலம் 2015 பாராளுமன்றத் தேர்தல் காலப் பகுதியில் அரசாங்க உத்தியோகபூர்வ வாகனங்களை பயன்படுத்தும் அமைச்சர்கள்/ பிரதி அமைச்சர்களினால் ரூபா 100,000 இற்கான மாதாந்த கட்டணம் ஒன்று அரசுக்கு செலுத்த வேண்டியிருந்தது. எனினும் உள்ளக போக்குவரத்து அமைச்சினால் தேர்தல் விடயங்களுக்காக வழங்கியிருந்த 02 வாகனங்களுக்காக ரூபா 200,000 இற்கான தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

### (ஆ) நட்டங்கள் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு 19 விபத்துகள் ஏற்பட்டிருந்ததுடன் அவற்றில் 08 வாகன விபத்துக்கள் தொடர்பாக மாத்திரம் ஆரம்ப விசாரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீதியான 11 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணங்கள் 103 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ரூபா 497,569 இற்கான வாகன விபத்துக்களின் மூலம் ஏற்பட்டுள்ள நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களிடம் அறவீடு செய்வதற்காக அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளபடியான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக ்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 27 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 03 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 129 | 92 | 37 |
| (iv) | ஆரம்ப நிலை | 81 | 50 | 31 |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 03 | 02 | 01 |
| | **மொத்தம்** | **255** | **174** | **81** |

**(ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டுள்ள மனித வளங்கள்**

அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினருக்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | ஊழியர் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்டிருந்த நிறுவனம் |
|---|---|---|---|
| (i) | அலுவலக உதவியாளர் | 01 | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் |
| (ii) | சாரதி | 01 | துறைமுகங்கள் மற்றும் கடல்சார் அமைச்சு |